மக்கள் என்றும் போற்றுகிற நபிகள் நாயகம் நெறியில் வாழ்ந்து வரும்

# இசுலாமிய சகோதர - சகோதரிகளுக்கு நல்வாழ்த்துக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரமலான் வாழ்த்துச் செய்தி!



சென்னை, மார்ச் 31 -

**மக்கள் என்றும் போற்றுகிற நபிகள் நாயகம் நெறியில் வாழ்ந்து வரும் இசுலாமிய சகோதர - சகோதரிகளுக்கு நல்வாழ்த்துக்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரமலான் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களின் இரமலான் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

அறம் பிறழா மனித வாழ்வை வலியுறுத்தும் இரமலான் திருநாளைக் கொண்டாடும் இசுலாமிய சகோதர, சகோதரிகளுக்கு உளம் கனிந்த வாழ்த்து களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இசுலாமிய சமுதாய மக்கள் ஒரு மாத காலம் கடுமையாக நோன்பிருந்து பசித்துன்பம் என்பதை அனுபவத்தால் உணர்ந்து, ஏழை எளியோர் பால் இரக்கம் கொண்டு, ஈகைப் பண்பு சிறக்க இரமலான் திருநாளை மிகுந்த மகிழ்ச்சியோடு கொண்டாடு கிறார்கள்.

“எனது கல்லறையை அலங்காரம் செய்யாதீர்கள்; என்னை இறைவனாக ஆக்கி விடாதீர்கள்; எனக்கு முன்னாள் வாழ்ந்த நபிமார்களை அப்படி ஆக்கிவிட்டார்கள்; உலர்ந்தரொட்டித்துண்டுகளையும், காய்ந்த பேரீச்சம் பழங்களையும் உண்டு வாழ்ந்த ஓர் ஏழைப் பெண்ணின் மகன் என்று கூறுவதில் நான் பெருமையடைகிறேன்” என்று தன் அன்பர்களுக்குக் கூறியவர் அண்ணல் நபிகள் பெருமான்.

பொய்மை, ஆடம்பரம் இவற்றைத் தவிர்த்து எளிமை, அன்பு, அடக்கம் இவற்றை குணநலன் களாகக்கொள்ள வழிகாட்டிய கருணை வள்ளல் அவர்.

பசித்தோருக்கு உணவிடவும், சமத்துவ, சகோத ரத்துவ உணர்வுடன் அனைவரையும் நேசிக்கவும் வழிகாட்டிய பெருமானார்.

“தொழிலாளரின் வியர்வை உலரும் முன் அவன் கூலியைக் கொடுத்து விடு” என்று உழைப்பை மதித்திடும் உத்தமப் பண்பை உலகுக்கு நீதியாய் போதித்தவர்.

மனித வாழ்வு மேன்மை அடைவதற்கான இத்தகைய மார்க்கங்களைப் போதிப்பதால்தான் நபிகள் நாயகத்தை மக்கள் என்றும் போற்றுகிறார்கள். அத்தகைய நபிகள் பெருமகனார் போதித்த நெறியில் வாழ்ந்து, நோன்புக் கடமைகளை நிறைவேற்றி முடித்துள்ள மனநிறைவோடு, இரமலான் திருநாளைக் கொண்டாடும் அன்பிற்குரிய இசுலாமிய சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற முறையிலும், முதலமைச்சர் என்ற பொறுப்பிலும் எனது உளமார்ந்த நல்வாழ்த்துகளை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றச் சங்கத்தின் சார்பாக,புனித ரமலான் ஈகை பெருவிழாவை முன்னிட்டு,மாநிலத் தலைவர் ரெ.தங்கம், இஸ்லாமிய பெருமக்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.சங்க மாநில நிர்வாகிகள் க.இளங்கோவன், வேளச்சேரி கி.பத்மநாபன்,பாஸ்டர் மோசஸ் செபஸ்டியன், ஓசூர் கே. சின்னச்சாமி, ஜி.குமார் ஆகியோர் உடன் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.3.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில், வன்கொடுமை தடுப்புச் சட்டம் மற்றும் விதிகளுக்கான இயக்க நடைமுறை கையேட்டினை வெளியிட, அமைச்சர் – மருத்துவர் மா. மதிவேந்தன் பெற்றுக் கொண்டார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்ளார்.

பர்கூர் பேரூராட்சியை

# சிறப்புநிலை பேரூராட்சியாக உயர்த்தியதற்கு நன்றி!

## சட்டப் பேரவையில் தே.மதியழகன் பேச்சு!



*சென்னை, மார்ச் 31 -*

*சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது பர்கூர் பேரூராட்சியை சிறப்புநிலை பேரூராட்சி யாக உயர்த்தியதற்கு நன்றி என்று உறுப்பினர் தே.மதியழகன் தெரிவித் துள்ளார்.*

*இது குறித்து பர்கூர் தே.மதியழகன் கேட்ட கேள்வியும் அதற்கு நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அளித் பதிலும் வருமாறு:*

**தே.மதியழகன்:** *பர்கூர் பேரூராட்சியை சிறப்புநிலை பேரூராட்சி யாகத் தரமுயர்த்தி யதற் கும், பேருந்து நிலையம் வழங்கியதற்கும், சந்தை கட்டுவதற்கு அனைத்து வசதிகளைச் செய்தமைக் கும் தமிழக முதல்வர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச் சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி யைத் தெரிவித்துக்கொள் கிறேன்.*

*படேதலாவ் ஏரியிலி ருந்து கப்பல்வாடி வழி யாக காக்கங்கரை வரை நீர் எடுத்துச் செல்ல கால் வாய் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய் வார்களா என்பதைத் தங் கள் வாயிலாக கேட்டறிந் துகொள்ள விரும்பு கிறேன்.*

**அமைச்சர் துரைமுருகன்:** *கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம், ஏ. நாக மங்கலம் கிராமத்தில் கட் டப்பட்டுள்ள தடுப்ப ணையின் மேல்புறத்தில் சுமார் 10 கி.மீ. தொலை விற்கு புதிதாகக் கால் வாய் வெட்டி, பர்கூர் ஆற்றில் கட்டப்பட் டுள்ள கப்பல்வாடி அணைக்கு மேல்புறம் தண்ணீர் கொண்டு செல்ல இணைப்புக் கால் வாய் அமைத்து, கப்பல் வாடி அணையின்மூலம் 8 ஏரிகளுக்கும், புட்டூர் அணைக்கட்டின்மூலம் 6 ஏரிகளுக்கும் தண்ணீர் தரும் திட்டம் தொடர் பாக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து, 45 இலட்சம் ரூபாய் ஒதுக் கப்பட்டிருக்கிறது. இதற் கான ஆக்கபூர்வமான நட வடிக்கையை அரசு எடுத்து வருகிறது என்ப தைத் தெரிவித்துக்கொள் கிறேன்.*

*இவ்வாறு விவாதம் நடைபெற்றது.*




# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| | 31.03.2025 | திருப்பூர் வடக்கு | திருப்பூர் தெற்கு | சேரன் காலனி, ராக்கியாபாளையம், நல்லூர் | செந்தில்வேல், ப.விஜயராஜ் |
| | 31.03.2025 | விழுப்புரம் தெற்கு | விக்கிரவாண்டி | காணை தெற்கு ஒன்றியம், கொடார் | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மு.ரோஜா |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 28–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி